பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: சதம் 75

எம்மிடம்.....
இறக்குமதிசெய்யப்பட்ட
றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சிற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். போன்: 8016

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 28 ஷவ்வா 11 இதழ் 179
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12-8-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 8174

★ மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சம்பவங்கள்

# கலவரங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கவும்!

## அரசாங்கத்துக்கு யாழ். அபிவிருத்திசபைகோரிக்கை

(யாழ்ப்பாணம்) அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தற்பொழுது கலவரங்கள் நடைபெற்றுவருவதால் இதனை நிறுத்த உடன்நடவடிக்கை எடுப்பதுடன் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம் வழங்கி, பாரபட்சமின்றி விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று அரசைக்கோரும் தீர்மானம், நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில்நிறைவேறியது.

திரு. எஸ். நடராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. என். ராஜேந்திரம் கொண்டுவந்த இப்பிரேரணையைத் திரு. க. சின்னத்துரை வழிமொழிந்தார்.

மேற்கண்ட பிரேரணைமீது திரு. என். ராஜேந்திரம் பேசுகையில் கூறியதாவது: மட்டக்களப்பில் நடந்த விளையாட்டுப்போட்டி சம்பவத்தைத் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு தமிழ்பேசும் மக்கள் தாக்கப்பட்டுவருகின்றனர். பலர் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர். இவர்கள் உணவு, உடை இழந்த நிலையில் உள்ளனர். குடிமேற்றத்திடடங்களிலிருந்தும் பலர் வெளியேறியுள்ளனர்.

### வேல்முருகு

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு கே. வேல்முருகு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளது மனவருத்தத்தை உண்டாக்கிறது வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இங்குள்ள மக்கள் உணவு உடைகள் அளித்து உதவிசெய்யவேண்டும் என்று கூறினர். [க]

### வேல்முருகு ஆஸ்பத்திரியில் அனுமதிக்க நடவடிக்கை

[மட்டக்களப்பு]

பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. கே. வேல்முருகுவை, ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்கு அவரது சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றத்திடம் அனுமதி கோருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ம

## அமைதி நிலவுகிறது

[கொழும்பு]

நாட்டின் சிலபகுதிகளில் வன்செயல்கள் தலைதூக்கிய போதிலும் நேற்றுப் பூரண அமைதி நிலவியதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் ஒருகுறிப்பிட்ட பகுதியில் அசம்பாவிதசம்பவங்கள் நிகழ்ந்ததாக பரப்பப்பட்ட வதந்திகளில் உண்மை எதுவும் இல்லை என்றுபொலிஸ் வட்டாரங்கள் நேற்று உறுதிப்படுத்தின.

[6-ம் பக்கம் பார்க்க]

## "கல்வித்தகைமையின்றி வேலையில்லை என்பதற்காக வெளிநாடு செல்லாதீர்கள்" - அமிர்

['யாழ்ப்பாணம்]

'உயர்கல்வி கற்ற மாணவர்கள்தான் வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்பைப் பெறச் செல்லவேண்டுமே தவிர சாதாரண கல்வித்தரத்துடன் வேலையில்லையே எனபதற்காக வெளிநாடு செல்லக்கூடாது' என்று மல்லாகம் வைபவமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர்களுக்கு ஆலோசனை தெரிவித்தார்.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வேண்டுகோளைவிடுத்தார்.

வித்தியாலய அதிபர் திரு. மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், இளைஞர்கள், படித்து முடித்ததும் உயர்கல்வி கற்கமுடியாத பட்சத்தில் தொழிற்கல்வியைக் கற்று தொழில்வளத்தைப் பெருக்க முயலவேண்டும் என்றார்.

'தமிழ்மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றம் சென்றார்களேதவிர, பாராளுமன்றக் கதிரைக்குப் பாரமாமாயிருக்கச் செல்லவல்லவில்லை' என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர் 'பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நாங்கள் பேசவேண்டியதைப் பேசியே தீருவோம்.

[6ம் பக்கம் பார்க்க]

## ஜனதிபதி வரும் வழியில் விமான நிலையத்தில் குண்டுவெடிப்பு

ரோம், ஆக. 11

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவும், குழுவினரும் இலங்கை திரும்புவதற்காக விமானத்தை ஏதிர்பார்த்து, இத்தாலியின் பியூமிசினோ விமானநிலையத்தில் காத்திருந்தபோது, அவ்விமான நிலையத்தில் திடீரென குண்டொன்று வெடித்து சகலரையும் அச்சத்துக்குள்ளாக்கியது.

இக்குண்டு வெடிப்பினால் விமான நிலையத்திலிருந்த இஸ்ரேலிய விமானச்சேவையொன்றின் அலுவலகம் பலத்த சேதத்திற்குள்ளானது இவ்அலுவலகத்தில் பணியாற்றிய இத்தாலிய உத்தியோகத்தர் ஒருவர் சிறு காயங்களுக்குட்பட்டதுடன் விமானமேறவிருந்த பெண் பிரயாணியொருவரும் அதிர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

பியூமிசினோ விமானநிலையத்தில்இடம்பெற்ற இக் குண்டு வெடிப்புக்குத் தானேபொறுப்பாளியென பாலஸ்தின விடுதலை அணியைச் சார்ந்த மே 15 என்றகுழுவினர் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு கடிதமூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சிங்கப்பூரில் ஆண்களுக்கு
வேலை வாய்ப்பு
கடைசிப்பக்கம் விளம்பர இல:0588 பார்க்க(0589)

யாழ்ப்பாணம் எரிந்தது ஏன்?
மக்மில்லன் புத்தகசாலை
விபரம்: கடைசிப்பக்கம் பார்க்க

அரிய சந்தர்ப்பம்
றேடியோ - டெலிவிஷன், ஏயர்கொண்டிசனின், வெல்டிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்களும், P. M. G. [Radio Officer] பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். நேரில் வரவும்
நாஷனல் அக்கடமி,
மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
0591

ஹோம் பினான்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்.
ரூபா 1000/-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வருமானத்தை வழங்குகிறது.
30% வருட முடிவில் வட்டி பெறுவோர்க்குவருடம் 25%வீத வட்டியும் 3%வீத போனஸும் 2% வீத சேமிப்பும் ஆக மொத்தம் 30% வீத வருமானம் வழங்கப்படும்
28% மாதாமாதம் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25% வீத வட்டியும் வருட முடிவில் 3% வீத போனஸும் ஆக மொத்தம் 28% வீத வருமானம் வழங்கப்படும்
இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.
உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.
ஹோம் பினான்ஸ் நம்பிக்கையின் இல்லம்.
தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி 89190

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிராவிடன்ஸ் வீதியில் இரண்டு பரப்புக் காணி நன்னீர் கிணற்றுடன் கூடவுடன் விற்பனைக்கு உள்ளது. வியாபார ஸ்தாபனங்கள் அமைக்கவும், வீடு கட்டவும் உகந்த நீள் சதுர வான காணி. தொடர்பு கொள்ளவும். க. தேவராசா, "சக்தி அகம்", கொக்குவில் மேற்கு. 0579

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் ஒன்பது பரப்புக் காணியும் பெரியவீடும் விற்பனைக்குள்ளது. இரண்டு முக்கால் பரப்பு தண்டுகளாகவும் வாங்கலாம். விபரங்களுக்கு 92 பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 0581

### தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல சோப் உற்பத்தி தொழிற்சாலைக்கு வான் விற்பனையாளர்கள் தேவை. தமது முன் அனுபவங்களுடன் விண்ணப்பிக்கவும். விலாசம் இல 0583 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0583

### பயிற்சி

செய்முறை அறிமுறையுடன் வெல்டிங்(Electrical Welding) பயிற்சி வகுப்பு ஆரம்பம் 19-8-81. C. E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22 ராஜமயர்செட்டியார் வீதி, (சாந்திநிலா விற்கு முன்) யாழ்ப்பாணம். 0555

### கல்வி

Advanced Level இரசாயனம், தூயகணிதம், பிரயோக கணிதம் கற்பிக்கப்படும். பட்டதாரி, 85 சிவன்கோவிலடி திருநெல்வேலி. 0556

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# அகதிகளுக்கு உதவுமாறு கோரிக்கை

(கொழும்பு)

அம்பாறை, மட்டக்களப்பு, மற்றும் பகுதிகளில் இடம் பெற்ற வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுமாறு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் தமிழ்மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் இக்கழகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. (ம-ர)

## வலைகளைத்திருடி வள்ளத்தில் கடத்தினர் இருவர் கைது

[மன்னார்]

திருடப்பட்ட வலைகளை வள்ளத்திலிருந்து இறக்கும் போது தலைமன்னார் பொலிசார் வைப்பற்றியதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

பேசாலை கடற்கரையில் காவப்போடப்பட்டிருந்த சுமார் 8ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை இருவர் வள்ளத்தில் ஏற்றிச்சென்று தலைமன்னாரில் இறக்கும் எண்ணமாம். தலைமன்னார்பகுதியில் இரவு ரோந்தில் ஈடுபட்ட பொலிசார் இவர்களைக்கைது செய்துள்ளனர்.

பொலிசார் மேற்கொண்ட விசாரணையையடுத்து வள்ளத்திலிருந்து இறக்கப்படுகிற வலைகள் பேசாலையிலிருந்து திருடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம்தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களும் மேலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## சிறுவன் மரணத்தில் சந்தேகம்

[மன்னார்]

12வயதுச்சிறுவனின் மரணத்தில் பெரும் சந்தேகம் தெரிவித்தலையடுத்து பிரேதபரிசோதனைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மரண விசாரணை அதிகாரி ஜனுப் எஸ். எம். அமது லெப்பை உத்தரவிட்டுள்ளார்.

மன்னார்கற்கடந்தகுளம்வேலு இராமச்சந்திரன் வயது 12 எனும் சிறுவன் இரவுஉணவு அருந்தியபின் வயிற்றுவலியால் துடித்து மரணமானார் என மரணமான சிறுவனின் தந்தை தெரிவித்தார்.

பிரேதபரிசோதனை நடத்திய மன்னார் வைத்திய அதிகாரி கலாநிதி குமரப்பாபிள்ளை மரண அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. சடலத்தில் முக்கிய உறுப்புகள் அரசாங்க இரசாயன பரிசோதனையின் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

## இழுவைக்கப்பலை காணவில்லை

(மன்னார்)

பேசாலைக்கடலில் நங்கூரம் விடப்பட்டிருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இழுவைப்படகை காணவில்லையாம். கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து பலத்த தேடுதல் வேட்டை நடத்தியும் இழுவைப்படகு கண்டுபிடிக்கப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிசிலும் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு பலத்தகாற்று வீசியதாக நங்கூரம் அறுந்து இழுவைப்படகு அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டதா? அல்லது யாராவது கடத்திச் சென்றார்களா? என இதுவரை தெரியவில்லை.

இழுவைப்படகைத்தேடும் படலம்பிராந்தியம் முழுவதும் பலத்த தேடுதல் வேட்டை தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

## கலவான எம். பி. யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம யாழ்ப்பாணத்துக்குஜயம் செய்யும் பொழுது அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்படவுள்ளதாகிறது.

கம்யூனிஸ்ட்கட்சி எம். பி. வரதர் திரு முத்தெட்டுவேகம தெரிவு செய்யப்பட்டபின்பு இம்மாதம் 30ம்திகதி யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக விஜயம் செய்யவிருக்கிறார்.

யாழ். மாவட்டகம்யூனிஸ்ட் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டமொன்றில் இவர் உரையாற்றுவார்.

இக்கூட்டம் யாழ். நகரசபை மண்டபத்தில் இம்மாதம் 30ம் திகதிமாலை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இவர் சென்று பார்வையிடுவதுடன் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து உரையாடுவார். (ம)

# 'ஒதுக்கப்பட்டவர்களை நவஜீவனம் ஆதரிக்கிறது'

(அரியாலை)

"வறுமைப் பிணியிலுமும், சமூக ஏற்றத்தாழ்வுகளிலுமும் சமூகத்தவிருந்து ஒதுக்கப்பட்ட சிறுவர், சிறுமியர்களை ஆதரித்து அவர்களை நற்பிரஜைகளாக்கி நாட்டிற்கு கனிகளும் நற்பணியை நவஜீவனம் செய்துவருகிறது. நலிந்தவர, இழந்தவர் ஆகியோருமையால் வாடுவோருக்கும் நல்வாழ்வு அளித்து அவர்களும் மனித சமூகத்தில் நற்பிரசைகளாக வாழமுடியும் என்ற புதிய ஜீவனை அளிக்கும் கைங்கரியத்தை நவஜீவனம் ஆற்றிவருகின்றது."

இவ்வாறு சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக் கல்விப் பிரதிப் பராதர உயர் வகுப்பு மாணவிகளிடை மகளிர் பாசறையான நவஜீவனம் அதிபர் அருள்திரு. ஏ. வி. தம்பிராசா அடிகளார் அங்குராார்ப்பணம்செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி லீலாதேவி தலைமையில் செந்தமாணவிகள் ஒருவரின் பண்பியல் பாசறையில் அடிகளார் தொடர்ந்த பேசுகையில் கூறியதாவது:

"இந்த நவஜீவனம் கண்டு வருவோருக்கு இது நவஜீவனமாக ஒளிமிகு மிகு சேதுத்திய மங்கிற்ற அல்லை நாடு சேதுத்தலுடன் அவர்களை மனித சமூகத்தில் சிறந்த பிரசைகளாக ஆக்கிவிடவும் முயற்சி செய்கிறோம். இந்த ஸ்தாபனத்தில் கல்வியற்றோருக்கு கல்வியும், தொழிற்பயிற்சி இல்லாதோருக்கு தொழிலும் அளித்து அவர்களைச் சமூகத்தில் சிறந்த வர்களாக ஆக்க நாம் முயற்சி செய்கிறோம்" என்றார்.

மகளிர் பாசறைக்கு மிகு வஞ்சிக்கத்த மாணவிகள் கொடி தொழில் விசாரணை ஆராய்ச்சி மன்றம், நூலகமும் ஒரு ஆகிய இடங்களை பார்வை விட்டுச் சென்றனர்.

# இன்றைய பலன்

குரோதி வருடம் 28ம் திகதி
புதன்கிழமை
(12 - 8 - 81)

மேடம்: புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும். பெரியோர்களின் உதவிகளை இடமுண்டு. கொண்ட கொள்கையில் அதிக உறுதிப்பாடு தென்படும், சிறப்பான தினம்.

இடபம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும்கிடைக்கும், உற்சாகமாகக்கடமையாற்றுவீர்கள், உலகை வெல்லும்.

மிதுனம்: மெத்தவும் பொறுமைசேரும், நேர்மிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், [illegible] செய்திபுடன் [illegible] வாழ்வும் உண்டு.

கடகம்: சிறிதளவும் சோபம் உங்களை நிலை தடுமாற வைக்கும். வேண்டியவர்களையே பகைத்துக்கொள்ள நேரிடலாம், தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு, அடக்கமும் சேவைகளின் கட்டுப்பாடுமே தேவையும் வேண்டும்.

சிங்கம்: அரசாங்க [illegible] மூலமாக [illegible] வாங்குவீர்கள், மனதில் அமைதி குறையும், அயலவர்களின் [illegible] கோபத்தைக் கிளறும், கடக்கம் விருப்பத்தக்கது.

கன்னி: சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள், இல்லறத்தில் அமைதி நிலவும், பூமியால் இலாபமுண்டு, பேச்சுவார்த்தைகள் இன்று நல்ல பலனைக்கொடுக்கும்.

துலாம்: தூக்கம் விழிப்பைத் தழுவுவதுக்கு, அடுத்தவர் எண்ணங்கள் அமோகமாகி, அடுத்தடுத்தெழுப்பதற்கு சிலர் முயல்வர், சகோதரவழியாக சஞ்சலம்படக்கூடிய செய்திகளும் இடமுண்டு.

விருச்சிகம்: அலுவலில் ஆக்கபூர்வமாகக் கிடைக்கும், செய்யாமல்களில் தனிமையும் மரவும், முயற்சிகள் முன்னேற்றத்துக்கும் இடமுண்டு, [illegible] வரக்கும்பேருதவி.

தனு: வரவேற்க வேண்டிய [illegible] இடக்கிடமும், [illegible] புதிய வரவுகளுக்கு [illegible] செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

மகரம்: நிலைக்க வைக்கும் [illegible] ஏற்படும், [illegible] வரவுகளால் [illegible] பிரயாணத்துக்கு [illegible] மனத்திடம் வேண்டும்.

கும்பம்: [illegible] மாறும், [illegible] ஏற்படும், [illegible] பிள்ளைகளுக்கு இடமுண்டு.

மீனம்: [illegible] நிலை தோன்றக்கூடும், [illegible] சிறிதளவு மாற்றம், [illegible] அளவுக்கு மிஞ்சியதாகவே [illegible]

சோதிடரத்தி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கடத்திவரப்பட்ட டைனமைட்

(மன்னார்)

கொழும்பிலிருந்து மன்னாருக்குக் கடத்தி வரப்பட்ட டைனமைட் வெடிகளை மன்னார் பொலிசார் மன்னார் ரயில் நிலையத்தில் வைத்து [illegible]

மன்னார் ரயில் நிலையத்தில் வைத்து பிரயாணி ஒருவரின் பெட்டிகள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸ் காவலர்களின் ஒருவர் பொதிகளைச் சோதனையிட்ட போது டைனமைட் இருப்பதைக் கண்டு பிடித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் வாலிபரான ஒருவர் சந்தேகத்தின்பேரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.




பூரண
பாதுகாப்பினை
உறுதிப்படுத்துங்கள்
யூனியன்
மடியுங் கேற்றுகளால்
(திறந்தவையும்
மறைவானவையும்)



தொழிற்சாலைகள், பண்டகசாலைகள், வாகன அமைப்புகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள், கடைகள், நகைக்கடைகள், தொகுதி வீடுகள் அனைத்துக்கும் பூரண பாதுகாப்பளிக்கவல்லதும் இன்றியமையாததும் மிகவுமுயர்ந்ததுமான யூனியன் மடியுங்கேற்றுகளே

10 அடி (சுமார் 3 மீ) உயரமும் எவ்வளவு அகலமுமான எந்த நீள்சதுர வாசலுக்குமேற்ப யூனியன் மடியுங்கேற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

[illegible] தேவைகளுக்கேற்ற வேலைப்பாடுகளுடன், விலை விபரமும் நீங்கள் [illegible] அனுப்பிவைக்கப்படும்.

உற்பத்திசெய்து விற்பனை செய்பவர்கள்.
சாமுவெல் சன்ஸ் அண்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. எண் 46, 371, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12. தெலிபோன் 32341 (4 லைன்கள்)

கிளை: 206/208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி: 462, யாழ்ப்பாணம்

Grant, K & E 4021

Rajan Iron Works
Estd. 1960
Grills.
For Collapsible & Shutter Gates
Compound Gates
PLEASE CONTACT
RAJAN IRON WORKS
No. 8, STANLEY ROAD, JAFFNA.

0580

### மணிவாக்கு

"ஆழ்ந்து கண்ட அறிவினாலும், ஓயாதுழைக்கும் உழைப்பினாலும், தேர்ந்து செய்யும் தியாகத்தாலும் மாந்தர் மண்ணகத்தில் மகிழ்வெய்தலாம்."
—புத்தர்பிரான்.

# நமது நோக்கு

## யாழ். மாவட்டத்திற்கு சோதனை காலம்

நாட்டின் அபிவிருத்திச் சபைகள் அனைத்துக்குமே இது ஒரு சோதனை காலம். அரசியல் எதிர்ப்பு, பகிஷ்காரம் போன்ற சூழ்நிலையில் குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் பெரும் போட்டியில் உருவான இச் சபைகள் எடுத்த எடுப்பிலே பல இடங்களிலும் அளவையமான பிரச்னைகளில் தலையுடைக்கும் காட்சி சுமுகமானதாகவில்லை.

அரசியல் கட்சி தியில் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் கட்டத்தில்தான இது துவங்கியிருக்கிறது. சில மாவட்டங்களின் தலைவர் ஒரு குறிப்பிட்ட கட்சியாயிருந்த போதும், அங்கம் வகிக்கும் இன்னொருவர் மாற்றுக் கட்சியாயின் தமது கட்சிக் கொள்கையைத் திணிக்க முயல்வது சாதாரணம். இந்தச் சூழ்நிலையில் 'போர்க் குணம்' என்றுமே பயனளிக்காது. மாற்றுக் கருத்தினரைத் தட்டிக் கொடுத்துப் போகும் மனப் பண்பு வேண்டும்.

யாழ். மாவட்டத்தின் நிலைமை இன்னொருவகைப் பட்டது. தலைவரும் அங்கத்தவர்களும் ஒரேகட்சி உறுப்பினர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை பெறுமளவிற்கு விறுவிறுப்பான அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்தி மாவட்டத்தை குறிப்பிட்ட கால எல்லைக்குள் கணிசமான அளவிற்கு முன்னேற்றவேண்டும்.

ஒரேகட்சி அங்கத்தவர்களிடையே அடிப்படைக் கருத்து வேறுபாடுகள் நிலவமாட்டா. ஆயினும் மத்திய அரசுக்குப் பொறுப்பான ஐ. தே. கட்சிக்கு முரண்பட்டதானதால், அரசுடன் தொடர்பு கொள்ளும் வகையில் நிதானம் வேண்டப்படும்.

கட்சித்தலைமையில் செல்வாக்குப் பெற்ற எல்லாத் தலைவர்களும் ஆட்சித் தலைமைக்கு ஏற்றவர்களாக இருப்பது அபூர்வம். கட்சிக்குத் தேவையான வேகமும்விறுவிறுப்பும் ஆட்சிநிர்வாகத்தில் எடுபடவேண்டும் என்ற கட்டாயமில்லை. வேகத்துக்கும் வெற்றிக்கும் கட்சித்தலைமையில் அதிக முரண்பாடு இல்லை. ஆட்சித்தலைமையில் வேகத்தை வெறியாக்கிடாத நிதானம் வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் வேற்றுமைகள், கட்சிப் பிணக்குகள், பிளவுகள் மற்றைய மக்களுக்கு சற்றும் [illegible] அல்ல மறைய அபாய சூழநிலையில் ஒற்றுமைப்பட்டதே ஒரு அற்புதச்செயல்.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தி அபிவிருத்தியில் வெற்றிகாண வேண்டுமானால் மக்கிய அரசின் ஒத்துழைப்பையும், மதிப்பையும் பெறவேண்டும். அலுவலகிய கலைடனங்கள். அநாகரிக கிண்டல்கள், அர்த்தமற்ற கருத்துப் பரிமாறல்களை உள்ளேயும் வெளியேயும் தவிர்ப்பது அவசியம்.

சமத்துவ புத்தியுடனும் ஆற்றல் அனுபவத்துடனும் நிர்வாகத்தை நடத்தவல்ல செயலாளருக்கு கொள்கைக் [illegible] திட்டங்களை விளக்குவதும், அத்திட்டங்களை அமுல் நடத்த ஆலோசனை வழங்குவதும முக்கிய பணிகள்.

கிரேக்க சிந்தனையாளர்கள் 'தனி மனிதனைவிட நாடு பெரிது' என்கிறார்கள். இதனை நாம் சற்று விரிந்தபொருளில் 'கட்சியைவிட மக்கள் பெரிது' என்கின்றோம்.

## பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்

அந்தணர் என்போர்
அறவோர் மற்றெவ்
வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்
டொழுகலால்

முனிவரின் கருத்துக்கு மிகப் பொருத்தமான அந்தணர் ஒருவர் யாழ்.பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிகப் பீடத்தின் தலைவராக அமைந்திருப்பதுஒரு அதிர்ஷ்டமானகாரியம்.

பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் 60-ம் ஆண்டு பூர்த்தி விழாவை ஒட்டி எமது பத்திரிகையில் காணப்படும் கட்டுரை அவருடைய தனிமதிப்புடைய பண்பைக் குறிப்பிடப்படிருக்கிறது.

மரபுவழி ஒழுக்க முறைகளைத் தவறாது பேணிவந்த பெரியோரெனறும் அடக்கம், அன்பு, இன்சொல், உபகாரசிந்தை- ஆகிய நான்கு தூண்களில் அமைந்த ஆளுமையே பேராசிரியரின் ஆசிரிய சேவைக்கு அணிகலமாக அமைகின்றனவென்றும் சரியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்துநாகரிகம் பெரும்பாலும்சைவநாகரிகமேயென்று இங்கு கருதப்படுகிறது. இந்த நாகரிக வாழ்வுக்கு எக்காலத்திலும் உயிர் கொடுப்பது சைவக் கிரியைகள்; அவை தமிழ் மக்களின் வாழ்வுக்கு நறுமணம் ஊட்டும் வகையில் வகுக்கப்பட்டிருக்கின்றன.

எங்கு பார்த்தாலும் பெரும் தலங்களிலும்கூட- பரபரப்பு நிறைந்த காலத்தில் இக்கிரியைகளின் அழகு, அர்த்தம், ஆன்மீக அமசம், இன்றைய 'சூட்டு' நிலையில் மக்களுக்கு -ஏன் ஆசாரியர்களுக்குங்கூட- புரிவதில்லை.

இந்த நிலையில் எதனையும் ஆற. அமர நிதானித்து எண்ணிப் பழகும் இயல்புடைய பேராசிரியர் சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்க இறைவன் அருள்புரிவாராக!

## வைதிகமரபு பேணும் பேராசிரியர் குருக்கள்

கா. கைலாசநாதக் குருக்கள் தம்பதிகள்

10ணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் நற்பண்புகளின் உறைவிடமாகவும், சிறந்த மாணவ பரம்பரையை உருவாகி வருபவராகவும் திகழ்கின்றார். வைதிகமரபின் உருவாகவே திகழும் இவர், நாடோறும் ஸ்ரீ சக்கர பூஜையைத் தமதில்லத்தில் நிகழ்த்தி வருபவர். வஸந்த நவராத்திரியின் போது ஸ்ரீ முன்னேஸ்வரக் ஷேத்திரத்திலும், சாரதா நவராத்திரியின் போது நல்லூர்ச்சிவன் கோவிலிலும் பக்தி சிரத்தையுடன் காண்போர் தம்வயமிழந்து அம்பிகையின் சிருவடிவில் லயிக்கும் வண்ணம் நிகழ்த்தும் பேராற்றலுடையவர். ஸ்ரீவடிவாம்பிகாபஞ்சரத்தினம் எனும் நூலை தேவிக்குச் சமர்ப்பித்தவர்.

வைதீக மரபின் சிறப்பினைத் தமது அனுட்டான முறைகளாலும், நூல்களாலும், கட்டுரைகளாலும், பேச்சுக்களாலும் விளக்கிவருபவர்கள். வைதிகமரபே இவர் வடிவில் திரண்டு நடமாடுகின்றதெனும் அளவிற்கு அருள் நிறைந்ததோற்றப் பொலிவுடன் திகழ்கின்றார். திருநீறு பொலியும் பரந்த நெற்றி. சைவத் திருநிறைந்த உருவத்தை மேலும் சிறக்கவைக்கும் சிகை ஆகியன இவரது தோற்றத்தில் பொலிந்து விளங்கும் வைதிகப் பண்பாட்டைப்பறை சாற்றும் அம்சங்கள்

குருகுலமுறைப்படி சிதம்பர சாஸ்திரிகள், சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரிடம் சமஸ்கிருத கல்வி பயின்ற இவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் பெற்றி ஹைமன், O H. De A விஜய சேகரா ஆகியோரிடமும் கல்வி கற்று அவர்களின் நன்மதிப்பையும் பெற்றவர்கள். பின்னர் இதிகாச புராண சைவத்துக்குப் பயன்படும் வகையில் சைவத்திருக்கோயிற் கிரியை நெறி எனும் நூலை யாத்தவர். சமஸ்கிருதம் கற்கவிழைவோரின் நன்மை கருதி சமஸ்கிருத இலகுபோதம் முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம் ஆகியவற்றை எழுதியவர்.

சிறு பிராயத்திலேயே சமயக் கிரியைகளில் பத்தி வாசிப்பதில் சிறந்து விளங்கிய இவர், வேதாத்தியயனம், சம்ஸ்கிருத இலக்கியம். பூர்வக்கிரியை ஆகியவற்றிலும் உரிய பயிற்சி பெற்றார். தாம் பல்கலைக்கழகம் சென்றவிடத்தும் மரபு வழி ஒழுக்க முறைகளைத் தவறாது பேணியதோடு இன்றளவும் அவற்றைப் பேணிவரும் சான்றோராக விளங்குகின்றார். சமய அறிவும், தத்துவ அறிவும் அவரிடம் வெறும் அறிவு கைகளாக விளங்காதுசாதனைகளாகப் பரிணமிக்கின்றன.

ஆழமான கருத்துடைய சமய தத்துவக் கருத்துக்களைத் தமக்கே உரிய பாணியினால் உப கதைகள் மூலம் தெளிய வைக்கும் பேராற்றல் உடையவர். ஆலயக்கிரியை, கோயில் நிர்மாண விதிமுறை, விக்கிரகங்களின் அமைப்பு முறை தொடர்பான விடயங்களில் விளக்கக்குறைவு ஏற்படுமிடத்து அவைபற்றி அறிய விளைவோருக்கு மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும் தெளியவைக்கும் தனித்துவமான திறன்மிக்கவர்;

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் அவர்களின் நன்மதிப்புப் பெற்று அவர்களால் பட்டாடை போர்த்து ஆசீர்வதிக்கப்பெற்றவர். அவரது அருளாணைப்படி அகில உலக இந்து மகாநாட்டிற் பங்கு பற்றி இந்நிறுவனத்தின் இலங்கைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்,

சிறந்த கல்வியால் உருவான அடக்கம், அன்பு, இன்சொல், உபகாரசிந்தை ஆகிய நற்பண்புகள், இந்து நாகரிகத்தின் தனித்துவததைப் பறைசாற்றும் அமிசங்கள், இவரதின் திரண்ட உருவம், யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு சிறந்த மாணவர் பரம்பரையை உருவாக்கிவரும் குருக்கள் அவர்கள் வைதிக மரபோடிணைந்த இந்து நாகரிகத் துணைக்கல்விப் பணியை ஒருங்காற்றிவருகின்றார். இவர் தமது இல்லக் கிழத்தியாருடன் பல்லாண்டு காலம் இனிது வாழ்ந்து தமது பணியைத் தொடர்ந்து புரிய ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னேநாதரும், கமலாம்பிகா சமேத கைலாசநாதரும் அருள்புரிய அவர்களது பாதகமலங்களை வழுத்துவோமாக!

ப. சர்வேஸ்வர ஐயர்
உப அதிபர் வட்டு இந்துககல்லூரி

# சோதனைகளைக் கண்டு சோர்வடையலாகாது!

## வட்டுக்கோட்டையில் 'அமிர்' உரை

[யாழ்ப்பாணம்]

"தமிழ் இனம் இன்று சோதனைக்குள்ளாகியுள்ளது. சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் பொலிஸ், இராணுவத் தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களால் அழிக்கப்படுகின்ற ஒரு இனமாக தமிழ் இனம் இன்று வாழ்ந்து வருகிறது.

தீவைப்புச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே எமது இனமுள்ளது. தமிழ் இனத்தை யாராலும் அழித்துவிட முடியவில்லை. உலகில் எத்தனையோ இனங்கள் அழிந்துள்ளன."

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலையின் பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்

இவ்வித்தியாசாலை அதிபர் திரு. வாகீசர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இச்சோதனை காலத்தைக் கண்டு தமிழ் மக்கள் சோர்வடையக்கூடாது. உறுதியைக் கைவிடாது அவர்கள் செயல்படவேண்டும். தமிழினம் என்றென்றும் இந்நாட்டில் வாழ்ந்துவரும்.

"தமிழ் இனத்தின் ஒற்றுமையின் சின்னமாக, விடுதலையின் சின்னமாக நான் இன்று நிற்கிறேன். ஆகவே என்னை எவராலும் அழித்துவிட முடியாது. தமிழ் மக்கள் மாத்திரம் எந்நேரமும் உறுதி குலையாது நிற்கவேண்டும்.

"இளைஞர் சமுதாயம் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தொண்டர் அணியாக தம்மை அமைத்துக்கொள்ளவேண்டும். எமது இளம் சமுதாயத்தை வாழவைப்பதற்காகவே நாங்கள் பல பல துன்பங்களை அனுபவித்துவருகிறோம்.

"எமது அடுத்த சந்ததியை துன்பத்திற்குள்ளாகாது சுபிட்சத்துடன் வாழவைக்கவேண்டியது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

"உலக அரங்கிலே எமது நடவடிக்கைகள் சரியென்று தான் கூறப்பட்டிருக்கிறது. தமிழ் இனம் கட்டுக்கோப்புள்ள ஒரு இனமாக இந்நிலையிலே செயல்படவேண்டும். தமிழ் மக்கள் எமக்கு இட்ட கடமையை நாம் உறுதியோடு நின்று செயல்படுத்துவோம்" என்றார்.

[6-ம் பக்கம் பார்க்க]

இன்று
நல்லூர்க் கந்தன்
8-ம் திருவிழா

வையற் கதிர்வடிவேலோனை
வாழ்த்திவறிஞர்க்
கென்றும்
நொய்யிற்யிள வெயேனும்
பகிர்மின்கள் நுங்கட்கு
இங்கன
வெய்யிற்கொதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல்
போல்
சையிற் பொருளும் உதவாது
காணுங் கடைவழிக்கே
—கந்தர் அலங்காரம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# கொட்டடி சிவன்பண்ணை வீதிக்கு குறுக்கே அமையும் கால்வாய்

கொட்டடி சிவன் பண்ணை வீதிக்கும் குறுக்கே அமையவும் மானிப்பாய் வீதியிலிருந்து பண்ணைவரை ஆடுகளுக்குமுன் எமது வட்டாரத்துள்ள மக்களின் நலனைகருதி மாநகரசபையால் கட்டப்பட்டதொன்றாகும். மேலும் இக்கால்வாய் நமது காலத்தில் இப்பகுதியில் மூன்று நிற்கும் வெள்ளத்தையும் சாதாரண நேரங்களில் அழுக்கு நீரையும் போக்கு வழி செய்யப்பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒன்றாகும்.

நற்பொழுது முற்றவெளியில் இக்கால்வாய் செல்லும் பகுதியில் 8 மீ குறிப்பிடப்பட்ட கட்டிடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

(1) வாணொலி நிலையம்.

(2) தன்னியக்கத் தொலைத் தொடர்பு ஆரி நிலையம்

இதன் விளைவாக வாணொலி நிலையத்தினர் தமக்கு ஒதுக்கப்பட்ட காணியின் உள்ள கால்வாயை மாற்றி முதலில் தமது முன்னேற்றமெம் நிறையமைக்க முற்பட்டனர். பின்னர் இக்கால்வாயைத் திசை மாற்றி சிவன் பண்ணைக் கடலாகவும் இதுவரை காலமும் கொட்டடி வாழ் சிறார்கள்பாவித்து வந்த விளையாட்டு மைதானத்தை சிறுகடலாகவும் அமைக்க முற்பட்டுள்ளனர். இக்கால்வாய் கொட்டடி முன்னேற்றக் கழகத்தினர் ஒரு வாசிகசாலை அமைப்பதற்கும் சிறார் பூங்காவிற்காகவும் யாழ் மாநகர அதிபரைக் கேட்டுக் கொண்டதன் பயனாக 1967ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வாணொலி நிலையத்தினர் இக்கால்வாயைத் தமக்கு ஒதுக்கப்பட்ட காணியாக மாற்றி அமைக்காமல் சிறுவர்கள் பாவித்து வந்த விளையாட்டு மைதானத்திற்கூடாக மாற்றியமைக்க முற்படுவதால் வட்டார மக்களுக்குப் பின்வரும் விளைவுகள் ஏற்படும்.

(1) இவ்வட்டாரத்தில் நெருக்கமாக வாழும் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்பட்டுப் பலவகைத்தொற்று நோய்களுக்கு வழி வகுக்கும்.

(2) இக்கால்வாய இப்பகுதியிலுள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் கோவிலை புனிதத்தன்மைக்குப் பங்கம் ஏற்படும்.

(3) இக்கோவிலுக்கருகே அமைந்துள்ள பாதிரியார்கள் மடத்திற்குத் தமிழ் நாட்டிலிருந்து வரும் யாத்திரிகளின் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்பட்டு பலவித தொற்றுநோய்களுக்கு வழி வகுக்கும்.

(4) வட்டாரத்தில் அழகு மாசுபடுத்தப்படும்.

(5) வட்டாரத்திலுள்ள சிறுவர்கள் இதுவரை விளையாடிய விளையாட்டு மைதானம் மறிபோகும்.

(6) வட்டார மக்கள் எப்பொழுதும் துர்நாற்றத்தைச் சுவாசிக்க நேரிடும்.

(7) வெளிவாக இருந்த இடத்தால் பொது மக்கள் இலகுவாகக் கோவிலுக்குப் போய் வந்தார்கள் இனிமேல் தடைசெய்வதால் மக்கள் சுற்றிவளைத்துக் கோவிலுக்குப் போக நேரிடும்.

(8) கோவிலுக்குப் போய் பக்தர்களும் துர்நாற்றத்தைச் சுவாசிக்க வேண்டி வரும்.

(9) வெளியாய் இருந்த இடத்தில் கால்வாயை மாற்றி அமைப்பதால் வாழ் கட்டிடத் திணைக்களம் தாங்கள் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான "கொங்கிறீட்" கல்லைத் தயாரிக்கும் இடமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். இதன் விளைவால் இப்பகுதி மக்கள் எந்த நேரமும் கிளம்பத்தூசியைச் சுவாசிக்க நேரிடும்.

இக்காரணங்களை முன்வைத்துக் கொட்டடி முன்னேற்றக் கழகம் தமது எதிர்ப்பை மாவட்ட அபிவிருத்தி தலைவர், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாநகரசபை முதல்வர், யாழ். மாவட்டக் கட்டிடத் திணைக்களப் பொறியியலாளர் முதலியோருக்குத் தெரிவித்திருந்தது.

இதன் விளைவால் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. பேரம்பலம் செல்வராஜன் செல்ற 17-7-81இல், இடத்தைக் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஆலாலசுந்தரத்துடன் கழக உறுப்பினர் முன்னிலையில் வந்து நேரில் பார்வையிட்டுக் கழகத்தின் கோரிக்கை நியாயமானது என ஏற்றுக் கொண்டு மாற்றுவழி காணும்வரை இவ்வேலையை உடனடியாக நிறுத்தும்படி கட்டிடத் திணைக்கள அதிபருக்கு அவசரத் தந்தி கொடுத்திருந்தார்.

அதனால் வட்டார மக்களின் சுகாதாரத்தைப் பேணவேண்டிய மாநகரசபை இது சம்பந்தமாகச் சுகாதார அதிகாரியின் அறிக்கையையும் பெறுமல் வட்டார மக்களுடன் கலந்துரையாடாமலும் தனது கேள்விக்குப் பொறியியலாளரின் பிரசாரைக் கடந்த 24-7-81இல் யாழ். மாவட்டக் கட்டிடத் திணைக்களப் பொறியியலாளருக்கு அனுப்பிவைத்துள்ளது மாநகரசபைப் பொறியியலாளர் கழகத்தின் கேள்விக்கோளுக்குச் செவிசாய்க்காது அறிக்கை அனுப்பியது மிகவும் வருந்தத்தக்கது. எனினும் கொட்டடி முன்னேற்றக் கழகம் கட்டிடத் திணைக்கள அதிபரைப் பேட்டி கண்டு கேட்டுக்கொண்டதற்கிணங்க கட்டிடத் திணைக்கள அதிபர் யாழ் மாவட்டக் கட்டிடத் திணைக்களத்தின் பொறியியலாளருக்கு கேள்வியை உடனடியாக நிறுத்தும்படி அவசரத் தந்தி அனுப்பியுள்ளார். மேலும் அவர் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர், கொட்டடி முன்னேற்றக் கழகச் செயலாளர் இன்னும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கும்வரை இவ்வேலையை நிறுத்தும்படி 31-7-81 கடிதமூலம் கேட்டுள்ளார். எனவே இனிமேலாவது யாழ். மாநகரசபையினர் வட்டார மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்படாது இக்கால்வாயை ஒருவருக்கும் பங்கம் விளைவிக்காத வகையில் வெளியாய் உள்ள வாணொலி நிலையத்திற்கும் தன்னியக்கத் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு முன்பாகச் செல்லும் வீதிக்கு அருகாமையில் அமைக்க முயற்சி எடுக்கவேண்டும். இப்படிச் செய்வதால் யாரையும் பாதிக்காது.

சி. இரத்தினசபாபதி
இளைய பொதுச் செயலாளர்
கொட்டடி முன்னேற்றக் கழகம்.

## ஈரானிலிருந்து நாடு திரும்பினர்

தெஹ்ரான், ஆக. 11

ஈரானில் வசித்துவந்த 57 பிரெஞ்சுப்பிரஜைகள் நேற்று பிரான்ஸிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். ஈரானில் எஞ்சியுள்ள பிரெஞ்சுப் பிரஜைகளும் நாளை பிரான்ஸிற்கு செல்லவுள்ளனர்.

# 'இஸ்ரேல் யுத்தநிறுத்தத்தை மீறவேண்டி ஏற்படும்'

## இஸ்ரேல் பாதுகாப்பமைச்சர்

டெல்அவிவ், ஆக. 11

"லெபனான் தென்பகுதியில் பலஸ்தீனியர்கள் யுத்தம் ஒன்றை மேற்கொள்ளஆயத்தமாகி வருகின்றனர். பலஸ்தீனியர்கள் இப்பகுதியில் யுத்தத்தை ஆரம்பித்தால், இஸ்ரேல் அமெரிக்காவுடன்செய்து கொண்ட யுத்தநிறுத்தத்தை மீறவேண்டி ஏற்படும்".

மேற்கண்டவாறு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஷரோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: "ஜோர்டானுக்கு மேற்கு கரையில் பலஸ்தீன இராஜ்யமாகும். அதன் மேற்கு கரையில் பலஸ்தீன இராஜ்யமொன்று உருவாவதை இஸ்ரேல் ஒருபோதும் அனுமதிக்காது" என்றார். (வெ)

# நியூட்ரன் குண்டு உற்பத்தி: அமெரிக்கதி அகாரி விளக்கம்

வாசிங்டன், ஆக. 11

நியூட்ரன் குண்டுகள் அமெரிக்காவில் சேமித்துவைக்கப்படுமென்றும், நெருக்கடியான கட்டத்தில் அவை பயன்படுத்தப்படுமென்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் மீது இக்குண்டுகளை வீசுவதற்கு ஒரு சில நிமிடங்களே போதுமென்றும் அவர் தெரிவித்தார். (திரிவி/சுக்கல்)

## பஸ்ஸைக் கடத்திய மாணவர்கள்

சென்னை, ஆக 11

பிரயாணிகள் பஸ் ஒன்றைக் கடத்திய சம்பவமொன்றில் மாணவர்கள் பஸ் சாரதியைப் பயமுறுத்தி தாம் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்றுள்ளனர்.

சென்னை அண்ணாசாலையில் மாணவர்களுடன் சென்று கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துச்சபை பஸ்ஸை [illegible] மிரட்டி மாணவர்கள் லாரி மாணவர்கள் பிரயாணிகளை இறக்கிவிட்டு, தம் மத்தியில் ஒருவர் லாரிக்குக் கொண்டுசென்று விடும்படி சாரதியைப் பயமுறுத்தி [illegible] லாரிக்கு பஸ்ஸைக் கடத்திச்சென்று இறங்கிக் கொண்டனராம். தமது அலுவலகம் முடியும் வரை லாரி [illegible] மீண்டும் மாதிலக் லாரிக்கு அழைத்துச்சென்று [illegible] மாணவர்கள் சாரதியைப் பயமுறுத்தியபோதிலும் [illegible] சாரியாக [illegible] ஓட்டிச்சென்று [illegible] பேட்டை பொலிஸ்நிலையத்தில் [illegible] செய்தாராம். (வி)

## பாகிஸ்தானுக்கு ஆயுதம் இந்திரா கவலை

நைரோபி, ஆக. 11

பாகிஸ்தானுக்கு "எப் 16" யுத்த விமானங்களையும், நவீன ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்க முடிவு செய்துள்ளமை குறித்து இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி கவலை தெரிவித்துள்ளார்.

நைரோபியில் நடைபெறும் எரிசக்தி தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ள அங்கு சென்றிருக்கும் பிரதமர் இந்திராகாந்தி கனடா பிரதமர் திரு ட்ரூடோ, ஐ. நா. பொதுச்செயலாளர் கூர்ட்வால்ட்ஹைம் ஆகியோருடன் சர்வதேச விவகாரங்கள் குறித்து அங்கு கலந்துரையாடியபோதே இவ்வாறு அவர் கவலை தெரிவித்தார். (வே)

## போலந்தில் ஆர்ப்பாட்டத்துக்கு தடை

வார்சோ, ஆக 11

போலந்து அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதிக்கவுள்ளது. போலந்தில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதை தடுக்க இராணுவத்தினர் பயன்படுத்தப்படவுள்ளனர்.

போலந்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை தவிர்

(5-ம் பக்கம் பார்க்க)

மீண்டும் வந்துள்ளது
மாணவ நண்பன்
Pilot
BALL POINT
பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

விற்பனையாளர். ஜோ வொல்ஸ் அன்ட் ஹெஜஸ கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

ரூ. 1/80

SRI COMMUNICATION

காலஞ்சென்ற தாவீது அடிகள்

# தமிழ்-சிங்கள மக்களின் ஒற்றுமையை பெரிதும் விரும்பினர்!

## பரு. நீதவான் நினைவாஞ்சலி

[புலோலி நிருபர்]

"தமிழ்—தமிழ் நல்லுலகம் கண்ட தனிப்பெரும் தமிழ் ஆராய்ச்சியாளரான தாவீது அடிகளாரின் இழப்பு தமிழுலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்."

இன்னாறு, யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நடாத்தப்பட்ட தவத்திரு தாவீது அடிகளார் நினைவாஞ்சலியில் அவரது உருவப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. [illegible] குறிப்பிட்டார். யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பரிபாலகர் அருட் திரு. [illegible] அடிகளார் தலைமை வகித்தார். அப்புனித தூர்த்துக்கின் ஆலய முன்றலில் நடைபெற்ற இந்நினைவாஞ்சலிக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய நீதவான் மேலும் குறிப்பிட்டதாவது:

தாவீது அடிகளார் ஒரு பன்மொழிப் புலவர். இவரது ஆய்ச்சித்திறன் தனிப்பெருஞ் சிறப்புடையது. இந்நாட்டிலே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் தங்களது மொழி கலாச்சாரம் எனியவைகளின் அடிப்படையிலே ஒற்றுமை நீக்கம் பெற்று வாழ்ந்தவர்களாக இருந்து வந்துள்ளனர். இச்சமுதாயங்களிடையே பூரண ஒற்றுமை ஏற்படவேண்டுமெனக் கருதினார்.

தமிழ், சிங்கள மக்களுக்கிடையேயுள்ள உறவு, தமிழ், சிங்கள மொழிகளுக்கிடையேயுள்ள தொடர்பு என்பனவற்றை [illegible] நேரத்திலே அடிகளார் கடந்த காலத்தில் [illegible] ஆராய்ச்சி நல்லபலனை அளித்தது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே வழங்கப்பட்டதும் இன்று பேச்சுவழக்கிலிருந்து விலகிப்போனதுமான பல பழந்தமிழ் சொற்கள் இன்னமும் சிங்கள மொழியிலே [illegible] வழங்கப்பட்டு வருவதைத் தாவீது அடிகளார் சுட்டிக்காட்டினார்.

தமிழ்ச்சொல்லும் ஒளி என்ற கருத்தை "ஒளி தமிழ்" என்ற சொற்றொடர் [illegible] இருந்தது [illegible] சங்க முதல் தமிழ் [illegible] எனவே தமிழ் என்னும் ஒளி குறிக்கும் உணர்த்தும் அறிவு என்ற கருத்துத்தெளிவாகின்றது.

திராவிட மொழிக் குடும்பத்தில் அடங்கும் சமஸ்கிருத மொழியிலே தாவரம் என்ற சொல்லுக்கு ஒளி என்ற பொருளுண்டு. தாமுலம் என்ற சொல் திராவிட மொழியிலிருந்து திரிந்ததாகக் கொள்ளலாம். தமிழ்மொழியும் அதற்கு முன்னோடியான ஒரு தாய் மொழியிலிருந்து தான் பரிணமித்திருக்கவேண்டும்.

தமிழின் தாய்மொழி எது மொழியாகவோ சமமொழியாகவோ இருக்கலாம். தமிழ் என்ற உருவம் தமிழ் மொழிக்குத் திட்டவட்டமாகக் கிடைத்த காலகட்டத்தை அறிய [illegible] தாவீது அடிகளின் தமிழாராய்ச்சி எம்மை இவ்வாறெல்லாம் சிந்திக்கவைக்கின்றது.

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் உரையாற்றுகையில்,

காலஞ்சென்ற தாவீது அடிகளாரின் [illegible] பூமியிலிருந்து [illegible] ஏற்படுத்தப்பட்டுள்ளது [illegible] அடிகளார் எங்கள் [illegible] இறைவனை [illegible] அடிகளாரின் இறப்பினால் எமது யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் கலங்குகின்றது என்றார்.

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தலைவர் ஆர். [illegible] மரியசிங்கம், [illegible] கருத்தித்துறை நகர முதல்வர் எம். வேலும்மயிலும், சட்டத்தரணி எஸ். கிருஷ்ணராசா, தோ. செபமாலை உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

# சிறிமாவிடமுள்ள ஒலிப்பதிவு நாடா சி. ஐ. டி. விசாரணை

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவரான மைத்திரிபால சேனநாயக்காவின் கண்டி இருக்கும் [illegible] சேனநாயக்காவுக்கும், பத்திரிகை நிருபர் ஒருவருக்குமிடையே நிகழ்ந்த தொலைபேசிச் சம்பாஷணை [illegible] ஒலிப்பதிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. மைத்திரிபால சேனநாயக்கா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் புலன் விசாரணைப் பகுதிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. [illegible] வீரசிங்க [illegible] டி. சம்பவம் சம்பந்தமாகத் தீவிர விசாரணை நடத்தும்படி தமது பிரிவினரைப் பணித்துள்ளார்.

இம்முறைப்பாட்டில் திரு. சேனநாயக்கா, இத்தகைய ஒட்டுக்கேட்டல் முறையானது அநாகரிகமானதும், சட்டபூர்வமற்றதுமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

விசாரணையை ஆரம்பித்திருக்கும் சி. ஐ. டி. பொலிசார் கட்சித் தலைவரான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உட்படக் கட்சியின் முக்கியஸ்தர்களையும் விசாரிக்கவுள்ளனர்.

இந்த ஒலிப்பதிவு பற்றித் தெரிவித்த திருமதி பண்டாரநாயக்கா, இது தன்னிடம் கிடைத்த ஒரு நாடாவின் பிரதியென்றும், தனது சொந்தப் பாவிப்பிற்குக்கும் இந்த நாடா கிடைத்தும் இருக்கும் பல பூசல்களின் [illegible] நிலைமைகள் கட்சியினருக்கு எடுத்துக்காட்டக் கூடியதெனவும் விளக்கியுள்ளார்.

இந்த நாடாவைப் பொதுக் கூட்டமொன்றில் ஒலிபரப்புச் செய்து அதன் மூலம் தனக்கும், தன் மகனுக்கும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

## சிரமதான குடிநீர் வழங்க ஏற்பாடு

[மன்னார்]

உயிலங்குளத்திலுள்ள 3 குழாய்க் கிணறுகளிலிருந்து மன்னார் பட்டினத்திற்கு சிரமதான குடிநீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதை முன்னிட்டு மன்னார் பாரிய நீர்த்தாங்கி ஒன்று நிறுவப்படுவதுடன் மன்னார் பட்டினம் முழுவதும் புதிய நீர்க்குழாய்கள் இணைக்கும் வேலைகளும் நடைபெற்று வருகிறது.

## குறை நீங்கியது

(மன்னார்)

மன்னார் ஆதார வைத்திய சாலைக்கு வைத்திய நிபுணர் சிவகுமாரனின் சேவை மீண்டும் கிடைத்துள்ளது.

கடந்த சில மாதங்களாக வைத்திய நிபுணர் சிவகுமாரனின் சேவை தடைப்பட்டு இருந்தது. தற்போது மீண்டும் மாதம் இருமுறை மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு விஜயஞ்செய்து வைத்திய சிகிச்சையளித்து வருகிறார்.

இதனால் மன்னார் ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் இல்லாத குறை நீங்கியது.

## இடமாற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமிகாலே பட்டின சபை வசிவிருப்பாளர் சங்கம்" தற்பொழுது பட்டினசபையில் விசேஷ உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவரை அச்சபையிலிருந்தும் இடமாற்றம் செய்யும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளது.

## நல்லூரில் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சோவியத் புத்தகக் கண்காட்சி நல்லூர் செட்டித் தெருப்பற்றிலுள்ள அமைக்கப்பட்ட காட்சிச்சாலையில் நடைபெற்றுவருகிறது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலம் இம்மாதம் 30ம் திகதிமுடியும் வரை இப் புத்தகக் கண்காட்சி நடைபெறும். இக்கண்காட்சியில் வைக்கப்பட்ட சோவியத் புத்தகங்கள் மலிவு விலையில் விற்கப்படுகின்றன. குறிப்பாக ஏராளமான மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டு வாங்கிச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையினரால் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [மா]

## போலந்தில்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ரீந்து அங்கு மக்கள் அரசாங்கத்திற்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்திவருகின்றனர்.

வார்சோவிலும், கம்யூனிஸ்ட் கட்சி தலைமைக்காரியாலயத்திற்கு முன்பும் [illegible] ஊர்வலங்களை நடத்தியபோது இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனர். (வே)


5-வது வெற்றி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ.பி. [illegible]
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-30
அன்னை வேளாங்கண்ணி

[illegible] (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
[illegible] நடித்த
இவளும் ஒரு பெண்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்யராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
THE ENFORCER
14-ந் திகதி முதல்
சங்கராபரணம்

வெற்றிகரமான 5-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர்., லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
டொனி ஹேர்ட்ஸ் நடித்த
MANITOU
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
13-8-81 முதல்
பாக்யராஜவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

மகத்தான 2-வது வெற்றி வாரம்
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
வி. பி. கணேசன் வழங்கும்
நாடு போற்ற வாழ்க"

நாகமஹல் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். சாவித்திரி நடித்த
வேட்டைக்காரன்

சிறந்த படங்களைத் திரையிடும்
வின்ஸர்
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் வண்ணத் திரைக் காவியம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்கணேஷ் ★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா ★ M. N. நம்பியார் ★ தேங்காய் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்மன்ட் கலர்)
டைரக்ஷன்: கே. சங்கர் இசை: எம். எஸ். விஸ்வநாதன்
[illegible] இப்படத்தை இத்திரையில் கேட்டு மகிழுங்கள்.

## இரு வாலிபர்கள் கைது: முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன?

[கொழும்பு]

பாணந்துறையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான இரு தமிழ்வாலிபர்களை விசாரணை செய்ததிலிருந்து பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக சி. ஐ. டி. பொலிஸ் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவாலிபர்களில் ஒருவர் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுகிறாராம். இவர் பல தடவைகள் இந்தியாவிற்குப்போய்வந்துள்ளார் என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாம்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டயறியிலிருந்து, முக்கிய குறிப்புக்கள் பல கிடைத்துள்ளதாகவும் அவற்றில் பிரதமரின் யாழ்ப்பாண விஜயங்கள் பற்றிய தொகுப்புக்கள், பஸ் வண்டிகள் கல்லெறிக்குட்பட்ட நிகழ்ச்சிகள் போன்றன குறிப்பெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது தங்கையொருவர் ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளதாகவும், தானும் ஒரு விரைவில் அங்கு புறப்படவிருந்ததாகவும் அவ்இளைஞர் மேலும் தெரிவித்துள்ளாராம். இவர்களை விசாரணைக்குட்படுத்தியிருக்கும் சி. ஐ. டி.யினர் இவ்விளைஞர்களுக்கும் ஆனைக்கோட்டை சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் வடபகுதியில் இடம்பெற்ற ஏனைய வன்செயல்களுடனும் இவர்களுக்கு தொடர்புகளிருக்கின்றனவா என ஆராய்ந்து வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு - யாழ்ப்பாணம் தனியார் பஸ்சேவை பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

நாட்டில் தற்பொழுது ஏற்பட்ட பதட்டநிலை காரணமாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகியநகரங்களுக்கிடையே நடைபெற்ற தனியார் பஸ்கள் சில சேவையிலிருந்தும் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்று அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட ஒரு பஸ் நீர்கொழும்பு— கொச்சிக்கடை புகையிரதக்கடவையில்வைத்து சில காடையர்களால் மறித்து தாக்கப்பட்டதாகவும், பஸ் சாரதி சாதுரியமாக சமாளித்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற வேறொரு தனியாருக்குச் சொந்தமான இரு பஸ்கள் வவுனியாவிலிருந்து திருப்பி அனுப்பக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. [இந்த பஸ்களில் வெளிநாடு செல்ல விருந்த பிரயாணிகள் சிலர், வேறு வாகனங்களில் ஏறிச் சென்றதாகவும் தெரிகின்றது.

புகையிரதத்தில் பிரயாணம் செய்வதிலும் பார்க்க பிரயாணச்செலவு அதிகரித்திருந்தாலும், சொகுசாகவும், பாதுகாப்பாகவும் பிரயாணம் செய்பவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். [மா]

## கிழக்கு மாகாண நிலைமை: பூரண கட்டுப்பாட்டில்

[மட்டக்களப்பு]

கிழக்குமாகாணப்பகுதிகளில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கலவரங்கள் அசம்பாவிதங்கள் என்பன பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள், பொலிஸ் அதிபர்கள், அரசியல்வாதிகள், மாவட்டசபைத் தலைவர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களின் கூட்டுமுயற்சியாலும் பிரயாசையாலும் கலவரங்கள் விரிவடையாது கட்டுக்கடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரங்களைமுற்றிலும்அடக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொலிசார், மல்வத்த சம்மாந்துறைப் பகுதிகளில் குழப்பக்காரர்கள் சிலரைக் கைதுசெய்ததுடன், பலரை எச்சரிக்கையும் செய்து வைத்திருந்தனர். மேலும் பிரதான இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டதுடன் இரவுபகலாக ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## வேலையில்லை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எமது பிரச்னைகள் தீர்க்கப்படாதபட்சத்தில் எம். பி. பதவிகளை முற்றுகத் துறக்க நாங்கள் தயார்' என்றும் உறுதி அளித்தார்.

நிறுவியவர் நினைவுரையை யாழ். செயலக பிரதி திட்டமிடல் அதிபர் திரு சு. சிவதாசன் நிகழ்த்தினார். திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

யாழ் மாவட்ட சபைத்தலைவர் திரு எஸ் நடராசா, காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ சிவஞானசுந்தரம் ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [மா]

## அமைதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு மாவட்டத்தில் நேற்று பூரண அமைதி நிலவியது,

கொழும்பு நகரில் ராணுவம் இரவு பகலாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. [ம]

## ப. நோ. கூ. சங்கங்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் அதிகாரி தரும் யோசனை

[யாழ்ப்பாணம்]

"நாட்டில் இப்பொழுது தோன்றியுள்ள நிலைமை சீரடையும் வரை ப. நோ. கூ. சங்கங்கள் தமது கிளைகளை தொண்டர்கள் மூலம் பாதுகாப்பதுடன் இரவு ரோந்து பாதுகாப்பு சேவை யொன்றையும் அமைத்துக்கொள்ளவேண்டும் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொ. சுகுணேந்திரன் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தினர் கொண்டாடிய 10வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பொலிசாரையே நம்பியிராமல் பொதுமக்கள் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி சேவை செய்யவேண்டும் என்றும் திரு. சுகுணேந்திரன் இவ்விழாவில் கேட்டுக்கொண்டார்.

"ப. நோ. கூ. சங்கங்கள் பாதுகாப்பற்ற கட்டடங்களில் தமது கிளைகளை அமைப்பதால் களவு போன்ற செயல்கள் ஏற்பட ஏதுவாகின்றன என்றும் குறிப்பிட்ட பொலிஸ்அதிகாரி, பாடுபட்டு சேவை செய்யும் கூட்டுறவு இயக்கச் சொத்துக்கள் அழிந்து போகாமல் இருக்க பாதுகாப்புக்களை பலப்படுத்த வேண்டும் என்றார். இதற்கு முடிந்தளவு பொலிசார் உதவி வழங்குவார்கள் என்றும் அவர் உறுதி அழித்தார்.

கோப்பாய் பொலிஸ் நிலையம் மூடப்பட்டதால், அப்பகுதி வேலைகளுக்கும் தாமே பொறுப்பாக இருப்பதாகவும் இதனால் இரவு பகலாக ஓய்வில்லாமல் கடமையைச் செய்ய வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [மா]

## தமிழினம்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசு இங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

"தமிழ் பேசும் மக்களின் நிலை இன்று மிகவும் இக்கட்டான நிலையிலுள்ளது. பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுவருகிறது. பதுளை, பண்டாரவளை, அம்பாறைபோன்ற இடங்களில் பல கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

"இப்பாடசாலைக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு தொகை பணத்தை ஒதுக்கியுள்ளேன்.

"எங்கள் பகுதிகளில் எமது பாதுகாப்பை நாங்களே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். கிராமங்கள்தோறும் தொண்டர் படை அமைத்து பாதுகாப்புகளை நாமே மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் இவ்விழாவில் உரையாற்றுகையில் கூறியதாவது:-

"வாழ்க்கையில் தன்னம்பிக்கையுள்ளவன் ஒருபோதும் தோல்வியடையமாட்டான். இளைஞர்கள் உணர்ச்சிவசப்படாது எமது இயக்க கட்டுப்பாட்டின்கீழ் செயல்படவேண்டும். இவர்கள் இயக்கத்தின் தலைவருக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். தலைவரில் நம்பிக்கை வைத்துச் செயல்படவேண்டும்.

"எமது மக்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லாது இணக்கசபைகளின் மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முன்வரவேண்டும்" என்றார்.

இவ்விழாவில் பல இளைஞர்கள் திரு. அமிர்தலிங்கத்திற்கு இரத்தத்திலகமிட்டனர். இப்பாடசாலைன் அபிவிருத்தி நிதியை சட்டத்தரணி க. கணேசானந்தன் நிதியுதவி செய்து ஆரம்பித்துவைத்தார். [வெ]

## மரண அறிவித்தல்

### த. சங்கரப்பிள்ளை

வைகதடியைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை சங்கரப்பிள்ளை காலமானார். தங்கம் சண்முகம், தம்பிப்பிள்ளை [பிரதிப் பணிப்பாளர், திறைசேரி], சிவசம்ப [சவூதி அரேபியா] ஆகியோரின் தந்தையும், கார்த்திகேசு சண்முகத்தின் மாமனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 12ம் திகதி [12-8-81] புதன்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் கைதடியில் நடைபெறும். உற்றாரும் உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர். 0586

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம்

(நில அளவையாளர்)

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் [நில அளவையாளர்] சவூதி அரேபியாவில் காலமானார். இவர் ஜெயலட்சுமியின் [நேசம்] அன்புக்கணவரும், மீனா [யாழ்ப்பாணக்கல்லூரி], சேந்தன், தயாளன் [வடடு. இந்துக்கல்லூரி] ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற N. V. கந்தையா [மலேயன் பென்சனர்], திருமதி இராசம்மா கந்தையா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற K. சதாசிவம் [ஓவசியர்], திருமதி தனலட்சுமிஅம்மா சதாசிவம் ஆகியோரின் மருமகனும், Major K. இரத்தினம் [நிறைவேற்றுப்பொறியியலாளர், பெருந்தெருக்கள் அமைச்சு, கொழும்பு], சட்டத்தரணி க. குணரத்தினம் J. P. U. M. பதில் நீதிபதி மல்லாகம், K. நவரத்தினம் [யாழ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ் சிதம்பரேணி] ஆகியோரின் சகோதரரும், Dr. S பசுபதிராஜா [U K], S. தர்மலிங்கம் [கணக்காளர் பெருந்தெருக்கள் அமைச்சு அனுராதபுரம்]. S. செல்வராஜா [Cement Corporation Nigeria], திருமதிகள் கமலாம்பிகை குணரத்தினம், கனகமணி கணேசானந்தன், வசந்தா தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின் அறிவிக்கப்படும். 0587


சிங்கப்பூரில்

# வேலைவாய்ப்பு

(FACTORY HELPERS FOR SINGAPORE)

ஆண்கள்

12-8-81 இன்று மட்டும்

நேர்முகப் பரீட்சை

ஆங்கிலம் கொஞ்சம் பேசக்கூடியவர்களுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

வயது எல்லை 18 —35

பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

சாகிப் ட்றேட் சென்டர்

[Sahib Trade Centre]

148, கே கே. எஸ். றோட் யாழ்ப்பாணம்

HAKEEM TRADES

63, Dam Street, Colombo- 12.

Tele. 34412 (0588) L/No. 363



புதிய புத்தகம்! உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள்

யாழ்ப்பாணம்

எரிந்தது

ஏன்?

எப்படி?

1981 மே 31—ஜூன் 1—6 திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த

கொலை, கொள்ளை, தீவைப்பு, வன்செயல் நிகழ்ச்சிகளின் தொகுப்பு

வீரகேசரி, தினபதி DAILY NEWS, சுதந்திரன், முரசொலி, NATION, ஈழநாடு முதலிய பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள்!

கலைஞர் மு. கருணாநிதியின் கடிதம்,

'சாமிஜி'யின் சிந்தனைக்குரிய சில கருத்துக்கள்!

இன்னும் பல

ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்கவேண்டிய-பாதுகாத்து வைத்திருக்கவேண்டிய நூல்!

மக்மில்லன் புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஜூலை ஆகஸ்ட் 12ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. O B 1002/36/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707. 389. 8126.